**STC 21/2022,** **1.08.2022**

**ம.சா.1 அருவிஆர் வேடியப்பன் (முதல் விசாரணை)**

நான் இந்த மனுவின் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதிரி எனக்கு கொடுத்த 15.08.2021ம் தேதியிட்ட எதிரி தான் கணக்கு வைத்திருக்கும் கரூர் வைசியா வங்கி, அரூர் கிளை காசோலை எண். 000103 ரூ. 10,00,000/-க்குண்டான காசோலையின் அசலை தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி காசோலையை நான் கணக்கு வைத்திருக்கும் கரூர் வைசியா வங்கி, அரூர் கிளையில் வசூலுக்கு போட்டபோது மேற்படி காசோலை எதிரி வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என கடந்த 10.11.2021ம் தேதி திருப்பப்பட்ட மெமோவின் அசலை தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. கடந்த 29.11.2021ம் தேதி எதிரிக்கு நான் அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி அறிவிப்பை எதிரி கடந்த 30.11.2021ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை விபரம் மற்றும் அஞ்சலக ரசீதை தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையை தாக்கல் செய்கிறேன். (**அது மசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.)

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.

நீதித்துறை நடுவர் அளூர்.